## வத்தள மாபோல நகர சபை

## கம்பஹா மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

#### 1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 09 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 15 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

#### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து வத்தள மாபோல நகர சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

##### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ)மீளாய்வாண்டில் கணக்கீட்டில் காணப்பட்டிருந்த அலுவலகர் பாதுகாப்பு வைப்பு நிலுவை ரூபா 207,310 காணப்பட்டபோதும் கணக்கீட்டுடன் சமர்ப்பித்த இணைப்புக்களின் பிரகாரம் அது ரூபா 186.818 ஆக காணப்பட்டுள்ளது. அந்த நிலுவைக்குள் 2015 ஆண்டினுள் விடுவிக்கப்பட்ட ரூபா 24,735 பெறுமதியான அலுவலகர்கள் பாதுகாப்பு வைப்பு கணக்குகள் உள்ளடங்கியிருந்தது.

(ஆ)மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31ம் திகதிக்கு இருப்பு மீதி ரூபா 2,831,838 காணப்பட்டபோதிலும் உபபேரேடு மற்றும் புத்தகத்தின் படி மீதி ரூபா 1,078,337 ஆக காணப்பட்டமையால் ரூபா 1,753,501 பெறுமதியான வேறுபாடு இருந்துள்ளது.

##### 1.3.2 இணக்கு செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2015 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 13 கணக்கீட்டு விடயங்களுக்காக கட்டுப்பாட்டு கணக்கின்படி மீதிகள் கூட்டு மொத்த தொகை ரூபா 250,668,847 ஆக காணப்பட்டமையால் அதற்கு சம்மந்தமாக உள்ள பேரேடு, உபபேரேடுகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுமொத்த தொகை ரூபா 229,844,591 ஆக காணப்பட்டமையால் ரூபா 20,824,256 வேறுபாடு உள்ளன.

##### 1.3.3பெறவேண்டிய மற்றும் செவுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பராமரிக்கப்படும் வைப்புப் பேரேட்டின் பிரகாரம், பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கடன் நிலுவைகள் (செலவு மற்றும் வரவு மீதிகள்) அனைத்துமே ஒன்றாக கூட்டப்பட்டமையினால் அவ் நிலுவைகள் தீர்ப்பனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31ம் திகதிக்கு பல ஆண்டுகளுக்கு முன்னிருந்து கொண்டுவரப்பட்ட முற்கூட்டியே பெற்ற முற்பணம் ரூபா 20,529,315 நிலுவை உள்ளன. இவ் நிலுவையினுள் 2009 ஆண்டுகளுக்கு முன்னரான ரூபா 18,195,185 காணப்பட்டது. இப் பணத்தை அறவிடுவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்வு சான்றின்மை

கூட்டுமொத்த தொகை ரூபா 16,485,603 பெறுமதியான 3 விடயங்களுக்காக எழுத்துமூலமான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் கணக்காய்வில் முறையாக கணக்காய்வு செய்யமுடியாதுள்ளது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுடன் இணங்காமை

மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2015 திசெம்பர் மாதத்தில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த வத்தள நடைபயிற்சி பாதை முற்றாக சேதமாக்கப்பட்டமை சம்மந்தமை நிதி ஒழுங்கு விதி 104இன் படி விசாரணை மேற்கொள்ளப்படவில்லை.

### 1.3.6 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

கடந்த வருடங்களாக சென்மதியாளருக்காக ஒதுக்கிவைத்த ரூபா 5,498,485 பெறுமதியானவை திரண்டநிதிக்கு சாட்டுதல் செய்யப்பட்டபோதிலும் அந்த நிலுவையில் உள்ள 10 வீதமான ரூபா 1,730,070 பெறுமதியான பிடிபணமும் பதிவளிக்கப்பட்டிருந்ததும் 2012 நவம்பர் 09ந் திகதி இலக்கம் எல்ஈடி/6/4/12 ஆகிய உள்;ராட்சி ஆணையாளரினுடைய அறிவுறுத்தலின் பிரகாரம், பதிவளிப்பு செய்வதற்காக எடுக்கப்பட்டிருந்த அனுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா. 14,558,940 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா. 30,794,403 ஆக விளைந்திருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய வருமானம்

**(அ)** சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்படப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | பாதீடு (ரூபா) 000' | உண்மை (ரூபா) 000' | டிசெம்பர் 31 மொத்த நிலுவை (ரூபா) 000' |
|---|---|---|---|
| ஆதனவரி | 67,254 | 55,845 | 63,887 |
| வாடகைகள் | 11,106 | 11,385 | 23,474 |
| வியாபார உரிமங்கள் | 2,007 | 1,130 | 1,541 |
| ஏனைய வருமானம் | 536,111 | 48,201 | - |

(ஆ) நகரசபை சட்டத்தின் 170(i)இ 170(அ)(i) மற்றும் 2ஆம் பந்தியின் பிரகபரம் கிடைக்கவேண்டிய வாடகைகள், தண்டப்பணம் அறவிடப்பட்டு நகரசபை நிதிக்கு செலவு செய்யப்பட வேண்டும் மற்றும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு செயலாளரின் கடமையாக இருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 திகதி வரைக்கும் ரூபா 53,429,378 பெறுமதியான கிடைக்கவேண்டிய வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமலும் மற்றும் 170(2) பந்தியின் பிரகாரம் ரூபா 67,038,246 பெறுமதியான கிடைக்கவேண்டிய ஆதனவரி அறவிடுவதற்கும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கதல் கந்திய கடைத்தொகுதியின் நிலத்தில் உள்ள கால்வாய் அருகில் காணித்துண்டுக்கு வாடகை வழங்குதல்

(i) கதல் கந்திய கால்வாய்க்கு அருகில் உள்ள 06 காணித் துண்டுகள் 2002ம் ஆண்டிலிருந்து 06 ஒப்பந்ததாரர்களுக்கு 15 ஆண்டுகளிற்காக வாடகைக்கு கொடுத்திருந்த போதிலும் வாடகை நிபந்தனைகளின் படி மாதாந்த வாடகை அறவிடப்படவில்லை. மீளாய்வாண்டு இறுதியில் அறவிடவேண்டிய நிலுவை ரூபா 4,565,688 ஆக உள்ளது.

(ii) ஒப்பந்தத்தின் இல 07 பந்தியின் பிரகாரம் ஆண்டு தோறும் மாதாந்த வாடகை 10 வீதத்திற்கு அதிகமாக பெறவேண்டிய போதும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கடை நிர்மானிப்பதற்காக காணித்துண்டுகள் வாடகைக்கு வழங்குதல்

சபைக்கு சொந்தமான கதல கந்திய கடைத்தொகுதி நிலத்தில் 06 காணித்துண்டுகள் 2002 ஆண்டிலிருந்து வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் வாடகைப்பணம் கொடுப்பனவு செய்த பின்னர் அந்த நிலத்தில் கடை நிர்மானம் செய்வதற்கான உரிமைத்தன்மை ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் அந்தந்த ஒப்பந்ததாரருக்கு கிடைத்திருந்தது இது சம்மந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒரு கடைக்கு சொந்தமான காணித்துண்டு 150 சதுர அடி உள்ள போதிலும் ஒப்பந்தத்தின் 5வது நிபந்தனையின் (ஆ) ப்படி அந்த காணித்துண்டில் மேல் மாடி நிர்மானிக்க தேவையெனில் அவ்வாடகை பெறுமதியில் 25 வீதம் மேலதிகமாக கொடுப்பனவு செய்யவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு கொடுப்பனவு செய்யப்படாமல் இரு நபர்கள் மேல் மாடி நிர்மானித்திருந்தனர்.

(ii) இன்றும் ஒப்பந்தத்தின் 6வது நிபந்தனையின் பிரகாரம் வாடகைக்கு வழங்குவோரால் அந்த சொத்து விலை மதிப்பீடு செய்திருந்த ரூபா 220,000 பெறுமதியான மாதாந்த விலை மதிப்பீட்டு வாடகையை காணியை பெற்றுக்கொண்டவர் கொடுக்கவேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக 14 ஆண்டுகளில் இருந்து எந்தவிதமான வாடகையும் கொடுக்கப்படாது கடைகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. இன்றும் நகரசபை அலுவலர்கள் வாடகை அறவிடுவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருந்தது. 2015 திசெம்பர் 31ஆந் திகதி வரைக்கும் பதிவேட்டில் உள்ள கிடைக்கவேண்டிய வாடகை நிலுவை ரூபா 4,565,688 ஆக காணப்பட்டுள்ளது.

(iii) ஒப்பந்தத்தின் 7 வது பந்தியின் பிரகாரம் ஆண்டுதோறும் மாதாந்த வாடகை 10 வீதத்திற்கு அதிகமாக பெறவேண்டிய போதும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

2015 ஆண்டு செயற்பாட்டு திட்டத்தில் உள்ள பின்வரும் செயற்பாடுகள் மீளாய்வாண்டில் நகரசபையில் செயற்படுத்தப்படவில்லை.

(அ) அலுவலக இடத்தினை அதிகரிப்பதற்கும் மற்றும் கட்டட உபகரணங்கள் கொள்வனவு செய்வது சம்மந்தமாக நான்கு செயற்பாடுகள்.

(ஆ) வியாபார வரி செலுத்தாத வியாபாரங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் மற்றும் சட்ட நடவடிக்கை எடுத்த பின்னர் அனுமதி எடுக்காமல் உள்ள செயற்திட்டங்களுக்கு கடை மூடுவதற்காக கட்டளை வழங்குவது சம்மந்தமான செயற்பாடுகள்.

(இ) பொது வசதிகள் சம்மந்தமாக 3 செயற்பாடுகள்.

(ஈ) சுற்றாடல் செயற்பாடுகள் சம்மந்தமாக 3 செயற்பாடுகள்.

(உ) ீயமெைப யடிைவைல அற்றும் முகாமைத்துவ செயற்பாடுகள் சம்மந்தமாக 6 செயற்பாடுகள்.

(ஊ) மயானத்தில் உள்ள எரியூட்டும் இடம், புதைக்கும் இடம் பற்றிய மயான சட்ட பந்தியின் பிரகாரம் அந்த இடங்களைவ ர்த்தமானியில் பிரசுரித்தல் மற்றும் பிரதான நகரங்களிற்கு எவ்வளவு தூரம் என்பதும் எவ்வாறு செல்ல முடியும் என்பது பற்றி பெயர்ப்பலகை செயவதற்குமான செயற்பாடுகள்.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை மீளாய்வாண்டில் இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 15,653,073 பெறுமதியான சராசரி மாதாந்த காசு மீதி இருந்த போதிலும் சபையினால் இந்த மேலதிகமான காசினை முதலீடு செய்வதற்கான கவனம் செலுத்தப்படவில்லை.

(ஆ) மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 310,673 பெறுமதியான மீதிமீளாய்வாண்டில் பயன்படுத்தப்படாதிருந்த போதிலும் அது நிலையான வைப்பில் முதலீடு செய்வதற்கான கவனம் செலுத்தப்படவில்லை.

(இ) நகரசபை அபிவிருத்தி அதிகார சபை தவிசாளரினால் 1997 செப்தெம்பர் 30ம் திகதி இலக்கம் 08 சுற்றறிக்கையின் பிரகாரம் நகர அபிவிருத்தி

செய்வதற்காக தனியான வங்கிக் கணக்கு திறக்கப்பட வேண்டியபோதும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

### 3.3.1 மாபோல பொது மண்டப கட்டட நிர்மானம் பற்றிய பரிசீலிப்பு

இந்த ஒப்பந்தத்திற்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா 1,798,408 பெறுமதியான தொகைக்கு 3 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு இருந்தது. ரூபா 1,077,139 செலவு செய்யப்பட்டு கட்டப்பட்டிருந்த பொது மண்டபம் சம்மந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) இந்த பொது மண்டபத்தின் உரிமைத் தனடமை பற்றிய நகரசபைக்குசொந்தமான காணிக்கு எடுக்கப்பட்ட பற்றிய உறுதிப்பத்திரம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்காமை

(ஆ) 2017 ஒக்டோபர் 19 ஆம் திகதி இலக்கம் 5720 ஆகிய சேவைத்திட்டத்தின் பிரகாரம், காணியின் அளவு 7 பேச்சஸ்சில் உள்ள போதிலும் 2011 மே 5ஆம் திகதி இலக்கம் 845 சேவைத்திட்டத்தின் படி காணித்துண்டின் அளவு 6.9 பேச்சஸ் ஆக காணப்பட்டமையால் காணித்துண்டில் குறைவாக உள்ளமை அவதானிக்கப்பட்டது.

(இ) இலக்கம் 845 சேவைத்திட்டத்தின் பிரகாரம் கட்டடத்தில் கிழக்குப் பக்கம் சபைக்கு சொந்தமான வெளியான காணியும் அந்தக் காணிக்கு கிட்டத்தில் வேறுநபருக்கு சொந்தமான வெளியான காணியும் இருக்கின்ற படி கட்டட சுவருக்கு கிட்டத்தில் சபையினால் சுற்று மதில் அமைக்கப்பட்ட போதிலும் அக் காணித்துண்டிற்கு அருகில் உள்ள ஆட்கள் பயன்படுத்தும் மற்றும் அக் காணியில் கழுவும் வேலையும் மலசல கூடமும் கட்டப்பட்டிருந்தது பற்றி 2016 பெப்ரவரி 16 மேற்கொண்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையில் காணப்பட்டது.

## 3.5 திண்மக் கழிவு கட்டணம் அறவிடப்படாமை

மேல் மாகாண பிரதம அமைச்சின் 2008 யூலை 30ஆம் திகதிய 1560/6 இலக்க சுற்று நிரூபத்தில் பிரசுரிக்கப்பட்ட 2008 இலக்கம் 1 ''திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கான சட்டங்கள்'' எல்லா உள்ளூராட்சி சபைகளிலும் தொடங்க வேண்டும் என்றும் 2010 டிசெம்பர் 21 இல் உள்;ராட்சி ஆணையாளர் (மேல் மாகாணம்) இலக்கம் எல்பிடி/05/08/பொது/தொகுதி கடிதத்தின் பிரகாரம், நகரசபை அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் இது சம்மந்தமாக வருமானம் மதிப்பீடு செய்யப்படவில்லை மற்றும் செலவீன மதிப்பீடு மட்டும் காட்டப்பட்டிருந்தது இதனால் அந்த விதிகளில் இல 88 இன் பிரகாரம் திண்மக் கழிவு வருமானத்தில் 20 வீத அளவு திணமக்கழிவு அதிகாரசபை நிதிக்கு செலவு செய்யப்படவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் விடயங்களில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வாகன கட்டுப்பாடு

(இ) வருமான நிர்வாகம்